(Chapter XXII code of Crl. Procedure)
In the Court of III Addl. District and Sessions Judge,
Tirupattur, Vlr. Dt.

| | | |
|---|---|---|
| **Civil Cases** | : | **MCOP.1/2018** |
| Deposition of witness of | : | **P.W.1** |
| Name | : | **சையத் இம்ரான்** |
| Father'sName | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 25.10.2018 சாட்சி ஆஜர் சத்திய பிரமாணம் பெறப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ1**. பிரேத பரிசோதனை அறிக்கை நகல் **ம.சா.ஆ2**. 108 ஆம்புலன்ஸின் பதிவுச் சான்று நகல் **ம.சா.ஆ3**. 108 ஆம்புலன்ஸின் காப்பீட்டு நகல் **ம.சா.ஆ4**. 108 ஆம்புலன்ஸ் ஒட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா.ஆ5**. இருசக்கர வாகனத்தின் பதிவுச் சான்று நகல் **ம.சா.ஆ6**. இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நகல் **ம.சா.ஆ7**. வாடகைக் காருக்கான ரசீது **ம.சா.ஆ8**. இறப்புச் சான்று நகல் **ம.சா.ஆ9**. 1 முதல் 3 மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ10 வரிசை**. வாரிசுச் சான்று நகல் **ம.சா.ஆ11**. இறந்தவரது ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ12**. ஆதார் கார்டில் 1984 என்பதற்கு பதிலாக 1994 என்று தவறாக போட்டுவிட்டார்கள்.

**4-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

இறந்த என் மனைவிக்கு விபத்தின்போது வயது 32. விபத்தின்போது என் மனைவி 3-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஆம்புலன்ஸில், மருத்துவமனைக்கு கல்மா என்ற தனது

தங்கையின் டெலிவரிக்காக, அவருடன் உதவிக்காக, வேலூர் அடுக்கம்பாரை மருத்துவமனைக்கு சென்று கொண்டிருந்தார். ஆவாரம்பாளையம் பஸ் நிறுத்தம் அருகே போகும்போது விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டு, பின்னர் புளியமரத்தில் மோதிவிட்டது என்றால், நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தில் சென்ற ஹரிஷ்குமார் மற்றும் பின்னால் உட்கார்ந்து பயணம் செய்த கோகுலகிருஷ்ணன் ஆகியோருக்கும் விபத்தில் அடிப்பட்டதாக கண்டுள்ளது என்றால், தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுத்த முனவர் என்பவர் அதே ஆம்புலன்ஸில் பயணம் செய்த மற்றொரு கர்ப்பிணி பெண்ணின் கணவர் ஆவார். அவர் ஆம்புலன்ஸ், இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டு, பின்னர் புளியமரத்தின்மீது மோதியது என்று முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளார் என்றால், தெரியாது. ஆம்புலன்ஸ் மிதமான வேகத்தில் ஓட்டப்பட்டிருந்தால், இருசக்கர வானத்தின்மீது மட்டும் மோதி, அத்துடன் நின்றிருக்கும் என்றாலும், புளியமரத்தின்மீது போய் மோதியிருக்காது என்றாலும், அதுபற்றி தெரியாது. இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றவர் இளவர் என்ற காரணத்தினால், முதல் தகவல் அறிக்கை இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரான இளவர்மீது பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால், தெரியாது. ஆம்புலன்ஸில் சென்றால், பென்னாத்தூர் நோக்கிச் சென்று, இடதுபக்கத்தில் திரும்பி, ரயில்வே கேட் தாண்டி, மீண்டும் இடதுபக்கம் திரும்பிதான் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால், ஆம். ஊசூரிலிருந்து பென்னாத்தூர் போகும் சாலை, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் சாலை என்றால், சரிதான். கிழக்கு நோக்கி சென்ற ஆம்புலன்ஸ், ரோட்டின் வலதுபக்கம் தெற்கில் உள்ள புளிய மரத்தில் மோதி நின்றுள்ளது என்றால், ஆம். எதிரில் வரும் இருசக்கர வாகனத்தை பார்த்து, இடது ஓரம் ஒதுங்கியிருந்தால், இருசக்கர வாகனத்தின்மீதும், புளியமரத்தின்மீதும் மோதியிருக்காது என்றால், தெரியாது. ஆம்புலன்ஸின் ஓட்டுநர் மிக அதிகமான வேகத்தில் ஓட்டி வந்ததால்தான், கன்ட்ரோல் செய்ய முடியாமல், இருசக்கர வாகனத்தின்மீதும், அதன்பின்னர் புளியமரத்தின்மீதும் மோதிவிட்டார்

என்றால், சரியல்ல. காட்டப்படும் வரைபடத்தில் ரோட்டின் இருபுறமும் சந்து எதுவும் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால், ஆம், ஆனால் ரோட்டின் இடதுபுறம் நடைபாதை ஒன்று உள்ளது. நடைபாதை எதுவும் இடதுபுறம் இல்லை என்றாலும், நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. ஆம்புலன்ஸில் பயணம் செய்தவர் புகார் கொடுத்திருப்பதால், ஆம்புலன்ஸின் ஓட்டுனரை காப்பாற்றுவதற்காக, இருசக்கர வாகன ஓட்டுநர்மீது புகார் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் ஆம்புலன்ஸ் ஓட்டுநரின் அஜாக்கிரதையும், அதிவேகமும், கவனக்குறைவும்தான் காரணம் என்றாலும், அதனால் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றால், 1, 2 எதிர்மனுதாரர்கள்தான் கொடுக்க வேண்டும் என்றால், சரியல்ல. நான் இஸ்லாமியர் இனத்தைச் சேர்ந்தவர். இஸ்லாமிய பெண்கள் கோஷா பெண்கள் என்றால், ஆம். மாடு வியாபாரம் நான் செய்கிறேன், கறி வியாபாரம் வேலையாட்கள் செய்வார்கள், அவ்வப்போது என் மனைவி கல்லாவில் உட்கார்ந்து பணத்தை வாங்குவார். நான் சொல்வதுபோல் என் மனைவி கறி வியாபாரமோ, மாட்டு வியாபாரமோ எதுவும் செய்யவில்லை என்றாலும், அதிக நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக அவ்வாறு வியாபாரம் செய்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. அதனால்தான் என் மனைவி சம்பாதித்தார் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. அதனால் நஷ்ஈடு 1, 2 எதிர்மனுதாரர்கள் கொடுத்தால் போதுமானது என்றால், சரியல்ல, இருசக்கர வாகனம் மற்றும் ஆம்புலன்ஸ்மீதும் தவறு உள்ளது. 1, 2 எதிர்மனுதாரர்கள் எனக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றாலும், 3 மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்கள் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால், சரியல்ல. 3-வது எதிர்மனுதாரர் நஷ்டஈடு எதுவும் கொடுக்க வேண்டியிருக்குமேயானால், விபத்தின்போது 3-வது எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால், 4-ம் எதிர்மனுதாரர் அவருக்கு ஈட்டுறுதி கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால், சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**